# இடம் பொருள் கலைஞர்

87

**மகிழவன்**


பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் சேலம் உருக்காலை!







சேலம் உருக்காலை திட்டத் தொடக்க விழாவில் பிரதமர் இந்திரா காந்தி, முதல்வர் கலைஞர், ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், மத்திய அமைச்சர் பி.ஆர்.பகத் ஆகியோர்...



# சேலம் உருக்காலை!

## தொழிற்பயணத்தைத் தொடங்கிய கழகம்

இந்தியாவின் தொழில்துறை வரலாற்றில் தவிர்க்க முடியாத இடம் சேலம். தமிழ்நாட்டு இயற்கை வளத்தில் உருவான உருக்காலை அமைந்துள்ள இடம். இந்த உருக்காலையின் வரலாறு, பிரிட்டிஷ் இந்தியா ஆட்சிக் காலத்திலேயே தொடங்கி விடுகிறது.

சேலம் மாவட்டம், கஞ்சமலைப் பகுதியில் இரும்புத் தாதுக்கள் இருப்பதை, கிழக்கிந்திய கம்பெனியின் குடிமைப் பணியில் இருந்த ஜோஷியா மார்ஷெல் கண்டுபிடித்தார். வெட்டி எடுக்கப்படும் இரும்புத் தாதுக்களை அந்தப் பகுதியிலேயே உருக்கி, உலோகமாக்க சேலம், பூலாம்பட்டிப் பகுதியில் 1847-ஆம் ஆண்டிலேயே ஆலை ஒன்றும் நிறுவப்பட்டது. ஆனால், அப்போது நிலவிய நிதி நெருக்கடியால் 1858-லேயே அந்த ஆலை மூடப்பட்டுவிட்டது.

### தி.மு.க. எழுப்பிய குரல்

சுதந்திர இந்தியாவில் மீண்டும் சேலத்தில் உருக்காலை அமைக்கப்பட வேண்டுமென்ற குரல்கள் எழத் தொடங்கின. தேர்தல் அரசியலுக்குள் புதிதாகக் களம் கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் இரும்பாலைக்கான கோரிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. 1957-ஆம் ஆண்டு சேலம், மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டத்தில் தி.மு.க. உறுப்பினர் தாண்டவன், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை உருவாக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார். தி.மு.கவின் மாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் இந்தக் கோரிக்கை வலுவாக முன்வைக்கப்பட்டது. 1957, 1962 மற்றும் 1967 என தி.மு.கழகம் சந்தித்த அனைத்துத் தேர்தல்களிலும் உருக்காலை அமைக்க, நடவடிக்கை எடுப்போம் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டது.

முன்னதாக 1964 -ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் அமைச்சரவையில் உருக்குத்துறை அமைச்சர் நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களிடம் தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு போய், காமராசர் இரும்பாலை சேலத்துக்கு வேண்டும் என வலியுறுத்திக் கூறியும் ஆலை அமைக்கப்படவில்லை.

### உறுதிகாட்டிய அண்ணா

1967-இல் பேரறிஞர் அண்ணா ஆட்சி அமைத்த பின், ஒன்றிய அரசாங்கத்தை நோக்கி, சேலம் உருக்காலைக்கான கோரிக்கையை வலுவாக முன்வைத்தார். 23.7.1967-இல் **சேலம் உருக்காலை, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம்** என்ற 2 முக்கியக் கோரிக்கைகளை முன்வைத்து, அனைத்து மாவட்டங்களில் எழுச்சி நாள் பொதுக்கூட்டங்களையும் நடத்தினார் அண்ணா. ஆலை அமைக்க தேவைப்பட்ட 100 கோடி ரூபாயில், 70 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசின் சார்பாக வங்கிகளில் கடனாகப் பெற்றும், 30 கோடி ரூபாயை ஜப்பான் நாட்டின் தொழில் அமைப்பாளர்களிடமும் இருந்து, திரட்ட தயாராக இருந்தார் அண்ணா. ஒன்றிய அரசு அனுமதியை மட்டும் தந்தால் போதும், என்று போர்க்குரல் எழுப்பினார்.

### கலைஞரால் விளைந்தது உருக்காலை

அண்ணாவின் மறைவிற்குப் பிறகு முதல்வராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர், “சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்றால், ஐந்தாண்டு திட்டத்தையே ஏற்றுக்கொள்ள மாட்டோம்” என்று 1970-இல், தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நேருக்கு நேர் நின்று உரிமைக்குரல் எழுப்பினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீண்ட நெடும் போராட்டத்தின் விளைவாக 1970-இல் சேலம் மற்றும் விசாகப்பட்டினத்தின் விஜயநகரில் உருக்காலைகள் அமைக்க, ஒன்றிய அரசு முறைப்படி அறிவிப்பு செய்தது. 17.04.1970 அன்று சேலம் உருக்காலைத் திட்டம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, 16.09.1970 அன்று பிரதமர் இந்திரா காந்தியும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞரும் இணைந்து ஆலை அமைக்க அடிக்கல் நாட்டினர்.

1973-இல் சேலம் உருக்காலை இந்திய உருக்காலை ஆணையத்தின் சார்பு நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், பின்னர் அது உருட்டாலையாக மாற்றப்பட்டு, 1977-இல் ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்தது. சேலம் உருட்டாலையை உருக்காலையாக மாற்ற, ஒன்றிய அரசிடம் தி.மு.க. தொடர்ந்து வற்புறுத்தியது; அதன் பயனாக 1996-2001 கலைஞர் ஆட்சியில் 1,553 கோடி முதலீட்டில் உருக்காலைத் திட்டம் தொடங்கப்பட்டது.

> **சேலத்தில் உருக்காலை அமைக்க வேண்டும் என்பதில், உறுதியாக நின்று சாதித்துக் காட்டிய இயக்கம் தி.மு.கழகம்.**

### சேலம் உருக்காலைச் சிறப்புகள்

2006-ஆம் ஆண்டு சேலம் உருக்காலையை விரிவுபடுத்தியது, மன்மோகன் சிங் தலைமையிலான அரசு. உலகின் 37 நாடுகளுக்கு



சேலம் உருக்காலையில் இருந்து இரும்புத் தகடுகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கலால் வரியாகவும், இறக்குமதி வரியாகவும் இதுவரை 1,200 கோடி ரூபாயை ஈட்டித் தந்துள்ளது சேலம் உருக்காலை. நேரடியாக 2,500 பேரும், மறைமுகமாக ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோரும் இதன்மூலம் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். எவர்சில்வர் உற்பத்தியில் உலகின் 12 பெரிய உற்பத்தியாளர்களில் சேலம் உருக்காலையும் ஒன்று. கார்பன், சாதாரண ஸ்டீல், சுருள், நாணய வில்லை, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஆகிய பொருள்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. ரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு மட்டும், ஆண்டுக்கு 30 ஆயிரம் டன் தகடுகள் இங்கிருந்து அனுப்பப்படுகிறது.

### தனியாருக்குத் தாரைவார்க்கத் துடிப்பதா?

பொதுத்துறை நிறுவனமான ‘ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட்’ நிறுவனத்திற்குச் சொந்தமான சேலம் உருக்காலை உள்ளிட்ட 3 உருக்காலைகளைத் தனியாருக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை ஒன்றிய அரசு 2019-ஆம் ஆண்டு தொடங்கியது. 2014-இல் மோடி ஆட்சி அமைந்தவுடனேயே அதற்கான அறிகுறிகள் தென்பட்டவுடன், உருக்காலை ஊழியர்கள் போராட்டத்தைத் தொடங்கினர். இரும்புத் தகடுகள் விற்கப்படாமலேயே இழப்பை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெறுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. கலைஞர் நனவாக்கிய அண்ணாவின் கனவுத் திட்டத்தை பாதுகாக்க, அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் 2019-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து பேசினார். தமிழ்நாட்டின் ஒருமித்த எதிர்ப்பில் ஒன்றிய அரசு அம்முயற்சியைக் கைவிட்டது.

சேலம் உருக்காலை ஒன்றிய அரசின் நிறுவனங்களில் ஒன்றாக இருக்கலாம். ஆனால், சேலத்தில் உருக்காலை அமைக்க வேண்டும் என்பதில், உறுதியாக நின்று சாதித்து காட்டிய இயக்கம் தி.மு.கழகம். அதை தனது ஆட்சிக் காலத்தில் அமைத்து, தொழில்துறை வளர்ச்சிக்கு முன்னோடியாக நின்றவர், முத்தமிழறிஞர் கலைஞர்.

**...வலம் வருவோம்**

## மனிதம் காக்கும் பெரியார்!

நம் எதிரிகள் யாரென வாழ்ந்தபோதும், வாழ்க்கைக்குப் பிறகும், அடையாளப்படுத்திக்கொண்டே இருக்கிறார், ‘பகுத்தறிவுப் பகலவன்’ தந்தை பெரியார். அவரைப் பின்பற்றவோ, பழிக்கவோ, உடன்படவோ, முரண்படவோ அவரை முதலில் வாசிக்கத் தொடங்குவோம் என, பெரியார் பிறந்த நாள் அன்று சமூக வலைதளத்தில் எழுத்தாளர் ஆன்மன் பதிவிட்டது, பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

“பெரியார் சிந்திக்காத துறை உண்டா என்றே சந்தேகம் வருகிறது. மனிதனின் எல்லாச் செயல்பாடுகளைப் பற்றியும் சிந்தித்த மிகச் சில ஆளுமைகளில் பெரியார் முக்கியமானவர். இன்னும் ஆயிரமாண்டுகளுக்குப் பிறகும், பெரியாரைக் குறிப்பெடுத்துக் கொண்டிருப்பார்கள். இவ்வளவையும் ஒரு மனிதர் எப்படிச் சிந்தித்தார் என்கிற வியப்பு, அப்போதும் மிஞ்சும்.

அவர் எதற்கும் அஞ்சியதாகப் பதிவுகள் இல்லை. நாம் இப்போது வாழ்கின்ற ‘சுயமரியாதை வாழ்வின் சிற்பி’ அவர் என்பதை மறுக்கவே முடியாது. அப்படி யாராவது மறுக்கிறோம் என்றால், அந்த அஞ்சாமையைப் போதித்தவரும் அவர்தான் ஐயமில்லை.

மனிதனை மனிதனாகப் பார்ப்பதற்கு, நமக்கு பெரியாரின் கண்கள் வேண்டும். சக மனிதனை ஆயிரம் பாகுபாட்டுடன் நடத்திய காலத்தில் துவங்கி, இன்று வரை அவரின் கருத்துகளைத்தான் மனிதம் காக்கப் பயன்படுத்துகிறோம். அண்ணல் அம்பேத்கரையும், மாமேதை மார்க்ஸையும், தந்தை பெரியாரையும் தவிர்த்துவிட்டு, நாம் வாழமுடியும். மனிதனாக வாழமுடியுமா என்பதுதான் கேள்வி.

இவர்கள் மூவரின் கருத்துகளைக் கொண்டுதான், நாம் இன்று ஏற்பட்டிருக்கிற அரசியல் நெருக்கடிகளையும் கருத்துச் சுதந்திரத்திற்கு விடப்படும் சவால்களையும் எதிர்கொண்டாக வேண்டும். பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட இந்தக் கருத்தியல்கள் மனிதம் என்கிற ஒற்றைப் புள்ளியில் வலுவாக இணைந்திருக்கின்றன. அந்தப் புள்ளியை உள்வாங்கி, அரசியல் புரிதலோடு நாம் நம்மைக் கூர்தீட்டிக் கொள்ளவில்லை என்றால். பெரியார் காலத்திற்கு முன்பு, அம்பேத்கர் காலத்திற்கு முன்பு, மார்க்ஸ் காலத்திற்கு முன்பு இருந்த ஓர் உலகத்தை நோக்கிப் பயணிக்கவேண்டிய கெடுவாய்ப்பு, நமக்கு முன்னால் நடுநாயகமாக இருக்கிறது” என்கிற அவரது பதிவு சமூக வலைதளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டு வருகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### எனக்குப் பெயர் சூட்டிய சூரியன்!



என்.கௌதமன்

1995-ஆம் ஆண்டு, ஒருவயது கைக் குழந்தையான எனக்குப் பெயர் சூட்ட, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம், எனது பெற்றோர் என்னைத் தூக்கிச் சென்றுள்ளனர். சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், கலைஞர் எனக்கு ‘கௌதமன்’ என்று பெயர் சூட்டினார். அப்போது, ஆற்காடு வீராசாமி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன் அவர்களும் உடனுள்ளனர்.

**– என்.கௌதமன், கள்ளக்குறிச்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### முப்பெரும் விழாவுக்கு இடையூறு!

1981-ஆம் ஆண்டு, கழகத்தின் முப்பெரும் விழா, நடைபெற விடாமல், அப்போதைய அரசு முட்டுக்கட்டை போட்டது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில், அ.தி.மு.க. முறைகேடாக நடந்துகொண்டதைக் கண்டித்து, கழகம் நடத்திய தொடர் போராட்டத்தின்போது, கலைஞர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். அதையொட்டி, தமிழ்நாடு முழுவதும் கழகத்தின் சார்பில், முழுஅடைப்புப் போராட்டங்கள் நடைபெற்றன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

605

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.